SACRED HEART COLLEGE (AUTONOMOUS)
Tirupattur - 635 601
Tamil Nadu, India.

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023

SACRED HEART RESEARCH PUBLICATIONS
December 2023
ISSN: 2456-821X

=====================================================================

# பெண் கவிஞர்களின் கவிதைகள் வெளிப்படுத்தும் பண்பாட்டு நெருக்கடிகள்

*ப.ஈஸ்வரி*
*முனைவர் பட்ட ஆய்வாளர் [பகுதி நேரம் ]*
*தூய நெஞ்சக்கல்லூரி [த] திருப்பத்தூர்*

=====================================================================

*முன்னுரை*

*கவிதை என்பது நுண்உணர்வுகளின் வடிவம். அது பிற கலைகளைக் காட்டிலும், மனிதனுக்கு மிக நெருக்கமானது, சொந்தமானது. அதனால்தான், கவிதை இயற்றும் கவிஞனின் மனநிலையை, எழுச்சியை அதை வாசிக்கும் வாசகனும் பெறமுடிகிறது.அத்தகைய சிறப்பு வாய்ந்த கவிதைகளை சங்ககாலம் முதலே பெண்கவிஞர்கள் எழுதி வருகின்றனர். அவ்வாறு எழுதப்பட்ட கவிதைகளிலிருந்து வேறுபட்டு, தற்கால கவிதைகள், புதிய பொருண்மைகளையும், வினாக்களையும் எழுப்பி புதிய தளத்தில் பயணிக்கின்றன.குறிப்பாக, பெண்கவிஞர்களால் எழுதப்படுகின்ற கவிதைகளில், காலங்காலமாக பண்பாடு என்ற பெயரில், சமூகத்தில் பெண்களின் வாழ்வில் புகுத்தப்பட்டிருக்கும் வாழ்வியல் நெருக்கடிகளைப் பற்றிய பொருண்மைகள் இடம் பெறுகின்றன. பண்பாடு என்பது அனைவருக்கும் பொதுவானது. ஆனால், சமூகத்தின் பல்வேறு வாழ்வியல் கட்டமைப்புகள் பெண்கள் மட்டுமே, பண்பாட்டின் அடையாளமென கட்டமைக்கப்பட்டிருக்கிறது. பண்பாடு என்ற பெயரில், பெண்கள் வாழ்வில் புகுத்தப்பட்டிருக்கும் வாழ்க்கை நெருக்கடிக்களையும், அதனால் பெண்களுக்கு ஏற்படும் வலிகளையும், இன்னல்களையும் பல பெண்கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் பதிவு செய்துள்ளனர். தற்கால பெண்கவிஞர்களின் கவிதைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் பண்பாட்டு நெருக்கடிகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*ஆய்வுச்சுருக்கம்*

*கவிஞனுக்கு, கவிதை ஒரு சிறந்த கருவி. அது, கவிஞன் எண்ணுகின்ற, அனுபவிக்கின்ற, எதிர்பார்க்கின்ற, வாழ்வியலை அவனது வாசகர்களும் அடைய துணையாய் இருக்கிறது. அதனால்தான்,எழுத வருகின்றன பெண்கள், எழுத்துலகில் பெரும்பாலும் கவிதையைத் தேர்ந்தெடுக்கின்றனர். காலங்காலமாக, தங்களின் உரிமைகளுக்காக, பெண்சமூகம் போராடிக் கொண்டே இருக்கிறது. சமூகத்தில் மதம், சாதி, குடும்ப மானம், மரியாதை என பெண்ணைச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கும், பண்பாட்டு வேலிகளும், ஏராளம். அவைகளைப் பற்றியெல்லாம் பெண்கவிஞர்களின் பல கவிதைகள் வெளிப்படையாகப் பேசுகின்றன. சாதாரண பெண்கள், அன்றாட வாழ்வில் சந்திக்கும் பல சமூக அவலங்களையும், பண்பாட்டு நெருக்கடிகளையும் பேசத் தயங்குகின்றனர். ஆனால், பெண் கவிஞர்களின் கவிதைகள், காலங்காலமாக பெண்ணினம் பேச மறந்த, பேசத் தயங்கிய, பேச பயப்பட்ட பண்பாட்டுச் சிக்கல்களையும், நெருக்கடிகளையும், வெளிப்படையாக, தயக்கமின்றி பேசுகின்றன. பெண்களின் வலியை, எதிர்ப்பார்ப்பை, கனவை, வாழ்வியலைப் பெண்களே பேசும் காலம் நோக்கி பெண்கவிஞர்களின் கவிதைகள் பயணித்துக்கொண்டிருக்கின்றன.*

*அம்மா வீடு*

*வாழ்க்கையில் அனைவருக்கும் சொந்தமானது, என்றுச் சொல்லிக்கொள்ள ஒரு வீடு தான் இருக்கும். ஆனால் பெண்களுக்கோ அது வேறுமாதிரியானது. அம்மாவீடு –மாமியார் வீடு, பிறந்த வீடு –புகுந்த வீடு என்ற இரண்டு வீடுகளிலும், காலம் முழுக்க அவளின் வாழ்க்கை*

*அல்லாடிக்கொண்டே இருக்கிறது. பெண்ணாகப் பிறந்தவள், திருமணமானபின், கணவன் வீட்டுக்குச் சென்றுதான் ஆக வேண்டும். அவள், சிறுவயது முதல் தான், பிறந்து, வளர்ந்து, பழகிய அனைத்தையும் விட்டுவிட்டு, கணவன் வீட்டிற்கு செல்ல வேண்டும். ஒரு போதும், ஆண், தன்வீட்டை விட்டு, பெண் வீட்டாரோடு வந்து வாழ்ந்துவிடக்கூடாது. அது மிகப் பெரிய குற்றமாக இச்சமூகத்தால் பார்க்கப்படுகிறது. திருமணபந்தத்தில் ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதியென வகுத்த, இச்சமூக வாழ்வியல் முறையை கவிஞர் எழிலரசி ,*

*"இருந்து விட்டுச் சென்றவீடு*
*மறுபடியும் வாய்ப்பதில்லை*
*நெருடல்களும் புழுக்கங்களுமாய்*
*பிதுக்கம் கொண்டதன் பிறகு*
*ஒருபோதும் என்னை அது*
*ஏற்றுக்கொள்வதில்லை*
*அவ்வப்போது மையம்*
*தென்றல் திட்டுக்கள்*
*எண்ணங்களில் மேலோங்கும்*
*அன்று படிப்பதற்கென*
*விடுதிக்குச் சென்றதன் பிறகு*
*விடுமுறைக்கால ஓய்விடமாயிற்று*
*மணமான பின் என் அம்மா வீடாயிற்று*
*என் வீடு "1*

*என்று கூறுகிறார்.பிறந்த வீட்டில் தான் பெற்ற மகிழ்வையும், புகுந்த வீட்டில் தான் இழந்த உரிமைகளையும் எண்ணி,ஏங்கும் சராசரிப் பெண்ணின் மனநிலையை வெளிப்படுத்துகிறார் கவிஞர் எழிலரசி.*

*நிர்ப்பந்தக் கயிறு*

*பெண்களின் வாழ்க்கை பலரின் நிர்ப்பந்தங்களால் நிர்ணயிக்கப்படுகிறது. குடும்பத்தினரின் நிர்ப்பந்தம், சுற்றியிருப்பவர்களின் நிர்ப்பந்தம் என பல நிர்ப்பந்தக் கயிறுகளால் பெண்களின் வாழ்க்கை, மகிழ்வற்று போகிறது. நிர்பந்தங்களால் உறவுகளைப் பெற்று, கனவுகளைத் தொலைந்து வாழுகின்ற நிலையை,*

*"விடியல் தொட்டு*
*நானடங்கும் நேரம் வரை*
*நிர்ப்பந்தக் கயிறொன்றின்*
*விசையில் இழுபடுகிறேன் "2*

*என்று கூறுகிறார் கவிஞர் எழிலரசி. மேலும், பெண்களின் வாழ்வில் நிர்ப்பந்தக் கயிறொன்று இருப்பதாகவும், அது தாலிக்கயிறாகவோ அல்லது பெண்களுக்கான தடைக்கயிறாகவோ, அவளைத் தொடரும்போது அது அவளுக்கு துன்பத்தை விளைவிப்பதாகவும் கூறுகிறார். நிர்ப்பந்தத்தினால் செய்யப்படுகின்ற திருமணங்களால், பல பெண்கள் நிம்மதியான வாழ்வை இழக்கின்ற நிலையினையும், சுற்றி இருப்பவர்களின் கொடுமை எல்லையை மீறும்போது, தற்கொலை போன்ற தவறான முடிவுகளை பெண்கள் எடுப்பதையும் நம்மால் காணப்படுகிறது. இன்றும் நம் சமூகத்தில் திருமணம் என்பது பெண்களுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டதாகவே உள்ளது என்பதே உண்மை.*

*காதல்*

*எல்லா மனிதர்களின் வாழ்விலும் காதல் எட்டிப்பார்க்கும் , அப்படி எட்டிப்பார்க்கின்ற காதலை வெற்றிகரமாக ஒரு ஆணால் மட்டுமே வாழ்வில் கொண்டாடமுடியும். பெண்களால் காதலை வெளிக்காட்டவும் முடியாது, கொண்டாடவும் முடியாது,கொண்டாடவும் கூடாது. அது இச்சமூகத்தின் விதி. சமூகம், குடும்பம் விதித்த கட்டுபாடுகளுக்கு கட்டுப்பட்டவர்களாகத்தான் பெண்கள் இருக்க வேண்டும்.*

*"தேவதைகள் காதலிப்பதில்லை*
*காதலிக்கப்படுகிறார்கள் என்பதன்*

*கதை தேடிக் காலத்தின் ஏடுகளைத் திருப்ப*
*மாங்காய் திருடிவரும்*
*ரெட்டைச்சடைக்காரனுடன்*
*கூடுதல் ஆசையுடன்*
*கூட்டாஞ்சோறு பொங்குவான்*
*நீச்சல் பழகித் தந்த*
*தோழியின் அண்ணனிடம்*
*சாகச மோகம் தான்*
*தாவணிப் பருவத்தில் வகுப்பில்*
*செய்யாத தவறுக்குத் திட்டுவாங்கி*
*முழித்தவனிடம் அதிக பிரியம்*
*பிறகு அடிக்கடி பார்வையால்*
*சுவரென முட்டி நின்றவனிடம் மட்டுமல்ல இதுவரை*
*யாரிடமும் நேசத்தைப் பகிரமுடியாமல்*
*ஆழ்த்து நீர்த் தாவரங்களென*
*அமிழ்ந்து கிடக்கின்றன*
*நினைவின் பாலை நக்கிக் குடிக்கும்*
*பூனையான அம்மா*
*பாலோ தினம் வளரும் கடல் "3*

*தன் வாழ்வில் சந்திக்கின்ற,நேசிக்கின்ற மனிதர்களிடம் நேசத்தைப் பகிர்ந்துக் கொள்ளும் காலம் எப்போதும் பெண்களுக்கு வாய்ப்பதில்லை. வெளிக்காட்டப்படாத உணர்வுகள், வளரும் பூனையென வளர்ந்து அலைவதாக கூறுகிறார் கவிஞர் மாலதி மைத்ரி.*

*" ஒருவனை நினைத்து ஒருவனுடன் வாழ்வது*
*மட்டுமே பெண்களின் ஒழுங்கு என பேசப்பட்டு*
*வந்திருக்கிறது.அவனுடனே சாவு எனவும்*
*கற்பிக்கப்பட்டு வந்திருக்கிறது. கற்பிக்கப்பட்டிருத்தல்*
*என்பதைவிட நிர்பந்திக்கப்பட்டிருக்கிறது.*
*நிர்ப்பந்தத்தை பெண், தன் பாரம்பரிய*
*இயல்பாக ஏற்றுக் கொள்கிறாள்."4*

*சமூகத்தில் ஒழுக்கம், காதல் இவைகளை ஆணைவிடவும் பெண்ணுக்குக் கட்டுப்பாடுகள் அதிகம்.ஆணின் பெரிய தவறுகளைக் கூட ஒரு சாதாரணச் செய்தியாகப் பார்க்கும் இச்சமூகம், பெண்ணின் மீதான சிறிய தவறைக் கூட பெரிய வரலாறாக மாற்றி விடுகிறது. கட்டுப்பாடுகளும், விதிமுறைகளும்,வாழ்வியல் சூழலும் இங்கு ஆணுக்கு ஒன்றாகவும்,பெண்ணுக்கு வேறாகவும் இருக்கிறது. தன் வேதனைகளை, வலிகளை, வேறுவழியில்லாமல் தன்வாழ்வியலாகவே ஏற்றுக்கொள்ள நிர்பந்திக்கப்பட்டிருக்கிறாள் பெண் என்கிறார் எழுத்தாளர் ஜெயப்பிரகாசம்.*

*கற்புநிலை*

*இன்று உலகம் முழுவதும் பெண் காட்சிப் பொருளாகவேப் பார்க்கப்படுகிறாள். அழகு பதுமையாய், வண்ணச் சாயங்களைப் பூசிக்கொள்ளும் பெண்கள் மட்டும் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுவதில்லை.குளிக்காத அழுக்குகள் படிந்த, தெருவோரத்தில் வாழும் பைத்தியக்காரியும், பாலியல் சீண்டல்களுக்கு ஆளாகிறாள். இன்றையச் சமூகம் கற்பு என்பது பெண்ணுக்கு மட்டுமே என்று வலியுறுத்துவதும், ஆணை உலகத்தின் ஆதிசக்தியாகப் போற்றி கண்டுங்காணாமல் இருப்பதும் பெண்களின் வாழ்வில் பல வாழ்வியல் நெருக்கடிகளை ஏற்படுத்துகிறது என்பதை,*

*பேர் அண்ட் லவ்லி முகம்*
*கிளினிக்_ப்ளஸ் கூந்தல்*
*லக்ஸ் பட்டு போன்ற சருமம்*
*இடெக்ஸ் கண்கள்*
*இமாமி இதழ்கள்*
*லக்மே நகங்கள்*

லலிதாவின் ஆபரணங்கள்
நல்லியின் ஆடைகள்
சரவணாவின் சீர்வரிசை
நாளொரு மேனியும்
பொழுதொரு வண்ணமுமாக
உறவாடியதில்லை இவற்றுடன்
என்றாலும்
அவள் முன்னே
இராஜகுமாரர்கள்
பிரியாணி பொட்டலத்துடன்
தோன்றுகிறார்கள் பின்னிரவில்''5

என்று கூறுகிறார். பிச்சைக்காரி, குழந்தை, குமரி, கிழவி என பாலியல் துன்புறுத்தல்கள் அனைத்து வயது பெண்களுக்கும் சில ஆண்களால் நேரிடுகிறது. கற்பு பற்றி பேசும் இச்சமூகம் ஆண்களுக்கும் அதைச் சொல்லித்தந்தால் மட்டுமே பெண்களின் இந்த அவலங்கள் எல்லாம் மாறும்.

''கற்பு நிலை என்று சொல்லவந்தால் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம் ''6

என்னும், பாரதியாரின் வரிகளுக்கு ஏற்ப, ஆண், பெண் இருவருக்கும் கற்புநிலை பொதுவான நிலையில் பேசப்பட்டால் மட்டுமே இச்சமூகத்தின் இந்த நெருக்கடிகள் மாறும்.

பெண் குழந்தை

இன்றளவும், நம் சமூகத்தில் ஆணும் பெண்ணும் சமம் என்பது வெறும் பேச்சளவில் தான் உள்ளது. பிறக்கும் குழந்தை ஆணாக இருந்தால் மகிழ்வதும், பெண்ணாக இருந்தால் வருந்துவதும் இன்றைக்கும் நிகழ்ந்துக் கொண்டுதான் இருக்கிறது. புராணங்களிலும், கதைகளிலும், ஆண்மகனே,தலைமகனாகப் போற்றப்படுகிறான். அதனால்தான், வழிவழியாக சமூகத்தில் ஆண் போற்றபடுபவனாகவும், பெண் இரண்டாம் தாரமானவளாகவும் இருக்கிறாள், என்று கூறுகிறார் கவிஞர் சுகிர்தராணி.

''மெலிந்த பின்புறங்கள் அசைய
அவள் கடந்து போகிறாள்
பிறந்த குழந்தையின் பிறப்புறுப்பை
எட்டிப் பார்க்கும் ஆவலுடன்
என்னிடம் வினாவுகிறார்கள்''7

பெருவிரல் உலகம்

பல பெண்கள் பெண்களுக்கான உரிமைகளைப் பெற போராடிக்கொண்டிருக்கும் அதே வேளையில், பெண்களின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு பெண்களுக்கே இல்லை என்பதும் நாம் கவனிக்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது. காலங்காலமாக, பெண்ணைப் பற்றி இச்சமூகம் கட்டமைத்திருக்கும் வடிவத்தை, வெளியைத் தாண்டி வர பெண்களாலேயே முடிவதில்லை என்பதை,

''தடுமாறுகிறது நா
கூசிப் போகிறது மனம் அளவிடும்
அச்சுறுத்தும் அலட்சியப்படுத்தும்
எல்லாப் பார்வைகளையும் தவிர்க்கக்
கால் விரலைப் பார்த்தே
குறுகிப் போனது பார்வை
என்ன நிமிர்த்தியும்
வளைந்தே போனது முதுகு
சுருங்கிப் போனது உலகம்''8

என்று கூறுகிறார் கவிஞர் எழிலரசி. பெண் என்றால் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் அடக்கத்தோடு வாழவேண்டும் என்ற இச்சமூகத்தின் கட்டமைப்பே பெண்களின் முதுகுத் தண்டினை வளைத்திருக்கிறது என்கிறார் கவிஞர் எழிலரசி.

மாதவிலக்கு

பெண்கள் பூப்பெய்தியவுடன் அவர்களைத் தனியாக தங்கவைக்கும் பழக்கம் இன்றும் பல இடங்களில் இருப்பதை நம்மால் காண முடிகிறது. தீட்டு என்று சொல்லி பெண்களை மாதவிலக்கான நாட்களில் தள்ளி வைக்கும் நிலையை,

"வீட்டுகுள்ளிலிருந்து அம்மாவின் குரல்
என்ன பாப்பா
இப்பத்தான் தனியாக படுகிறாள்
மாசாமாசம் பழகிடும் என்கிறாள் ஆயா"9

என்று கூறுகிறார் கவிஞர் மாலதி மைத்ரி. இதே போல்,

"எந்நாடு போனாலும்
தென்னாடு உடைய சிவனுக்கு
மாதவிலக்குள்ள பெண்கள்
மட்டும் ஆவதே இல்லை"10

என்று, கோயில்களுக்குள் மாதவிலக்கான பெண்கள் புறக்கணிக்கப்படும், சமூகநிலையை கேள்வி கேட்கிறார் கவிஞர் கனிமொழி.

முடிவுரை

காலங்காலமாக ஆண்களால் கட்டமைக்கப்பட்ட இச்சமூகம், ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதியென ஒருதலைபட்சமாக வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்திருக்கிறது. ஒரு பக்கம் பெண்ணைத் தெய்வமாக, நீராக, நெருப்பாக, மலையாக பெருமைப் பேசிவிட்டு, மறுப்பக்கம் அவளுக்கான அடிப்படை உரிமைகளைக் கூட கொடுக்காமல் ஒடுக்கிவைத்திருக்கிறது. பெரும்பாலும், தமிழ்ச் சூழலில் பெண்ணே பண்பாட்டின் அடையாளமாக முன்னிறுத்தப்படுகிறாள். அதனால் பெண்களின், காதல், திருமணம், கனவு, என அனைத்தையுமே சுற்றியிருப்பவர்கள் தான் தீர்மானிக்கிறார்களே தவிர, அவளால் அவளது வாழ்க்கையைக் கூட சுயமாகத் தீர்மானிக்கமுடிவதில்லை, விடுவதில்லை. பெண்களின் சுயத்தைக் கட்டுபடுத்துகின்ற, அடக்குமுறைக்கு ஆட்படுத்துகின்ற சமூக பண்பாட்டு நெருக்கடிகள் களையப்பட வேண்டியவை, திருத்தி எழுதப்படவேண்டியவை. அவ்வாறே நிகழ்ந்தால் மட்டுமே சமூகத்தில் ஆண், பெண் சமநிலை ஏற்படும்.

துணை நூற்பட்டியல்


1. எழிலரசி, மிதக்கும் மகரந்தம், ப – 19, காலச்சுவடு பதிப்பகம்.
2. மேலது, ப – 46
3. மாலதி மைத்ரி, சங்கரா பரணி, ப – 47, காலச்சுவடு பதிப்பகம்.
4. ஜெயப்பிரகாசம், பா, அந்தக் கடைசிப்பெண்ணாக, ப – 20, அகரம் வெளியீடு
5. மாலதி மைத்ரி, நீலி, ப – 36, காலச்சுவடு பதிப்பகம்.
6. பாரதியார், பாரதியார் கவிதைகள், கும்மி, ப – 463, வானவில் பிரசுரம்.
7. சுகிர்தராணி, அவளை மொழிபெயர்த்தல், ப – 34, காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி)லிட்.
8. எழிலரசி, மிதக்கும் மகரந்தம், ப – 49, காலச்சுவடு பதிப்பகம்.
9. மாலதி மைத்ரி, சங்கரா பரணி, ப – 83, காலச்சுவடு பதிப்பகம்.
10. கனிமொழி, அகத்திணை, ப – 48, வ.உ.சி. நூலகம்.


********* ********* ********** ********* ********* ********** ********** **********